# தினசரி வழிபாட்டு முறை



# 8.ஸ்ரீ ஞான ஸ்கந்தர் திருப்புகழ்

மாணா உடடலினைமாண்பின் தெனநிதம்
மயங்கி வீழ் பவக்கடல் - மலமூழ்கி
வானா ரரும் பொருள் வண்டமிழ்ச் சந்தத்தால்
வாழ்வுற இசைக்கிலேன் - மயலோட 1

தேனார் மொழியினார் திருவெனப் புலியெனத்
தினந்தினம் கிடந்தலை - சிறுநாயேன்
தீநாய் வழிகெடுத் திருளற வொளி கொடுத்
திந்த்ரியம் அடக்கிய பரமேலாம் 2

காணா ஒரு பொருள் காணரு முயற்சியைக்
கைக்கொள அருள்வதும் - ஒரு நாளே
கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய
காங்கேயனே திரு - முருகோனே 3

நாணாள் உயஅருள் ஞானானந்தர் உறை
ஞானா நந்தபுரி யுறைவோனே
ஞானாமுதந் தரு ஞானாதிப சிவ
ஞானாதித குகப் பெருமாளே ! 4